# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : இந்திய அரசியலமைப்பின் அட்டவணைகள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## இந்திய அரசியலமைப்பின் அட்டவணைகள் - SCHEDULES

### 1-வது அட்டவணை - மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்கள்

- மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களின் எல்லைகள் (ம) பெயர்கள் பற்றி குறிப்பிடுகிறது.
- 1-வது அட்டவணை தொடர்புடைய விதி : Art - 1 to Art - 4

### 2-வது அட்டவணை - சம்பளம் ,படிகள் (ALLOWANCES),சலுகைகள்

- குடியரசுத்தலைவர், ஆளுநர், மக்களவை சபாநாயகர், மக்களவை துணை சபாநாயகர், மாநிலங்களவை தலைவர் (ம) துணைத்தலைவர், மாநில சட்டப்பேரவை சபாநாயகர்கள், (ம) துணைத்தலைவர்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், CAG, ஆகியோரின் சம்பளம், படிகள், சலுகைகள் பற்றி குறிப்பிடுகிறது.
- **2-வது அட்டவணை தொடர்புடைய விதிகள்**

**Art 59(3)** = குடியரசுத்தலைவரின் சம்பளம், படிகள், சலுகைகள்

**Art 65(3)** = துணைக்குடியரசுத்தலைவரின் சம்பளம்,படிகள்,சலுகைகள்

**Art 75(6)** = பிரதமர் (ம) அமைச்சர்கள் சம்பளம், படிகள், சலுகைகள்

**Art 97** = பாராளுமன்ற அதிகாரிகளின் சம்பளம், படிகள் , சலுகைகள் (மக்களவை சபாநாயகர், துணை சபாநாயகர், மாநிலங்களவை தலைவர், துணைத்தலைவர்)

**Art 106** = பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பளம்,படிகள், சலுகைகள்

**Art 125** = உச்சநீதிமன்ற நீதிபதிகள் சம்பளம்,படிகள், சலுகைகள்

**Art 148(3)** = CAG சம்பளம்,படிகள், சலுகைகள்

**Art 158(3)** = மாநில ஆளுனர் சம்பளம்,படிகள், சலுகைகள்

**Art 164(5)** = முதலமைச்சர் (ம) அமைச்சர்கள் சம்பளம்,படிகள், சலுகைகள்

**Art 186** = சட்டமன்ற அதிகாரிகள் சம்பளம்,படிகள், சலுகைகள்

**Art 221** = உயர்நீதிமன்ற நீதிபதிகள் சம்பளம்,படிகள், சலுகைகள்

### 3-வது அட்டவணை - பதவி பிரமாணம் (OATHS), உறுதிமொழிகள்

- மத்திய மாநில அமைச்சர்கள் , நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகள்,உயர்நீதிமன்ற நீதிபதிகள் CAG, ஆகியோரின் பதவிபிரமாணம் (ம) உறுதிமொழிகள் (AFFIRMENTS) பற்றி குறிப்பிடுகிறது.
- **3-வது அட்டவணை தொடர்புடைய விதிகள்**

**Art 75(4)** = பிரதமர் (ம) மத்திய அமைச்சர்களின் பதவிபிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 99** = நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிபிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 124(6)** = உச்சநீதிமன்ற நீதிபதிகள் பதவிபிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 148(2)** = CAG பதவிபிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 164(3)** = CM (ம) அமைச்சர்கள் பதவிபிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 188** = மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் பதவிபிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.

**Art 219** = உயர்நீதிமன்ற நீதிபதிகள் பதவிபிரமாணம் (ம) உறுதிமொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.

## 4-வது அட்டவணை -ராஜ்யசபா இடஒதுக்கீடு

- மாநிலங்கள் (ம) யூனியன் பிரதேசங்களுக்கு ராஜ்ய சபாவில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் பற்றி குறிப்பிடுகிறது.
- 4-வது அட்டவணை தொடர்புடைய விதிகள்

  **Art 4(1), 80(2)**

## 5-வது அட்டவணை - SC/ST பகுதிகளின் நிர்வாகம் (ம) கட்டுப்பாடுகள்

- நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட-SC (ம) பழங்குடியினர்-ST பகுதிகளின் நிர்வாகம் (ம) கட்டுப்பாடுகள் மேற்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.
- விதிகள்= **Art-244(2)**

## 6-வது அட்டவணை -வடகிழக்கு மாநிலங்களில் ST பகுதியின் நிர்வாகம்

- அசாம், மேகாலயா, திரிபுரா, மிசோரம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் ST பகுதிகளை நிர்வாகம் மேற்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.
- விதிகள் = **Art 244(2)**

## 7-வது அட்டவணை -மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப்பகிர்வு

- மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.
- மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்கள் 3 பட்டியலாக பிரிக்கப்பட்டுள்ளது.

  1.மத்திய பட்டியல் - CENTRAL LIST

  2.மாநிலப்பட்டியல் - STATE LIST

  3.பொதுப்பட்டியல் - CONCURRENT LIST

- 1. **மத்தியப்பட்டியல்**
    - மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள துறைகள்மீது மத்திய அரசு (பாராளுமன்றம்) சட்டம் இயற்றி அதிகாரம் செலுத்தும்.
    - மத்தியப்பட்டியலில் ஆரம்பத்தில் (26.1.1950) 97 துறைகள் இருந்தது.
      தற்போது 99 (100) துறைகள் உள்ளன.
      EX:வங்கி, பணம் வெளியிடுதல், அஞ்சல் தந்தி, பாதுகாப்பு, அணுசக்தி , கணக்கெடுப்பு, தகவல் தொடர்பு,ஒலிபரப்பு, விமானப்போக்குவரத்து, தணிக்கை.

- 2. **மாநிலப்பட்டியல்** ;
    - மாநில அரசின் கட்டுப்பாடிலுள்ள துறைகள் மீது மாநில அரசு (சட்டமன்றம்) சட்டம் இயற்றி அதிகாரம் செலுத்தும்.
    - மாநிலப்பட்டியலில் ஆரம்பத்தில் 66 துறைகள் இருந்தது. தற்போது 61 துறைகள் மட்டுமே உள்ளன.
    - 1976-42-வது சட்டத்திருத்தத்தின்படி கல்வி, காடுகள் (அ) வனங்கள், எடை அளவீடுகள், வனவிலங்கு பாதுகாப்பு, நீதி நிர்வாகம் ஆகிய 5 துறைகள் மாநிலப்பட்டியலிலிருந்து பொது பட்டியலுக்கு மாற்றப்பட்டது.
      EX: சட்டம் ஒழுங்கு, காவல், சிறை, பொது சுகாதாரம், உள்ளாட்சி, வேளாண்மை, மீன் வளம், சந்தைகள், திரை அரங்குகள், கேலிக்கைகள் (அ) சூதாட்டங்கள்.

- 3. **பொது பட்டியல்**
    - குறிப்பிட்ட துறைகள் மத்திய , மாநில அரசு ஆகிய இரு அரசுகளின் கட்டுப்பாட்டிலும் இருக்கும்.இத்துறைகள் மீது இரு அரசுகளும் சட்டம் இயற்றும்.மத்திய சட்டத்திற்கும், மாநில சட்டத்திற்கும் முரண்பாடு ஏற்பட்டால் மத்திய சட்டமே அதிகாரமிக்கது.
    - பொதுபட்டியலில் ஆரம்பத்தில் 47 துறைகள் இருந்தது. தற்போது 53(52) துறைகள் உள்ளன.
    - EX: கல்வி, காடுகள் (அ) வனங்கள், எடை அளவீடுகள், வனவிங்கு பாதுகாப்பு, நீதி நிர்வாகம், திருமணம், மணவிலக்கு, தொழிலாளர் நலன், எரிசக்தி (ம) மின்சாரம், உரிமையியல் (அ) சிவில் சட்டங்கள், குற்றவியல் சட்டங்கள, மக்கள் தொகை கட்டுப்பாடு, குடும்ப கட்டுப்பாடு, செய்தித்தாள், புத்தகம் (ம) அச்சுக்கூடங்கள், பொருளாதார சமூக திட்டமிடல், மருந்துகள், ரயில்வே (2016-BIBEK DEBROI COMMITTEE)

- **7 -வது அட்டவணை தொடர்புடைய விதிகள்.**

  **ART 246**

## 8-வது அட்டவணை - மொழிகள் ART 344(1), 351

- அரசியலமைப்பு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- அரசியலமைப்பு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் = 22
- இந்தியாவில் பேசும் மொத்த மொழிகள் = 1652 (845-BOOK)

| | | |
|---|---|---|
| 1 | அசாமி | அசாம் |
| 2 | பெங்காலி | மேற்கு வங்காளம் |
| 3 | குஜராத்தி | குஜராத் |
| 4 | இந்தி | UP, MP, HP, BIHAR, RAJESTHAN, HARIYANA |
| 5 | கன்னடம் | கர்நாடகா |
| 6 | காஷ்மீரி | ஜம்மு-காஷ்மீர் |
| 7 | மலையாளம் | கேரளா |
| 8 | மராத்தி | மகாராஷ்டிரா |
| 9 | ஒடியா(ஒரியா) | ஒடிசா (2011-96 வது சட்டதிருத்தத்தின்படி 24-3-2011 அன்று ஒரியா மொழியின் பெயர் ஒடியா என மாற்றப்பட்டது.) ஒடிசா |
| 10 | பஞ்சாபி | பஞ்சாப் |
| 11 | சமஸ்கிருதம் | வட இந்தியா |
| 12 | தமிழ் | தமிழ்நாடு |
| 13 | தெலுங்கு | ஆந்திரா, தெலுங்கானா |
| 14 | உருது | ஜம்முகாஷ்மீர், தெலுங்கானா |
| 15 | சிந்தி | வடமேற்கிந்தியா (1967-21-வது சட்ட திருத்தத்தின் படி சிந்தி 8-வது அட்டவணையில் 15-வது மொழியாக அறிவிக்கப்பட்டது. |
| 16 | கொங்கனி | கோவா |
| 17 | மணிப்புரி | மணிப்பூர் |
| 18 | நேபாளி | UP, WB, ASSAM, BIHAR (1992 - 71வது சட்டதிருத்தபடி கொங்கனி, மணிப்புரி,நேபாளி ஆகிய 3 மொழிகள் 8-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் 15-18 உயர்த்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 19 | போடோ | அசாம் | 2003-92 வது ச.தி.படி 4 மொழிகள் 8 வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. |
| 20 | டோக்ரி | ஹிமாச்சல், ஜம்முகாஷ்மீர் | |
| 21 | மைதிலி | பீகார் | |
| 22 | சாந்தலி | பீகார், ஜார்கண்ட் | |

## 9-வது அட்டவணை - பல்வேறு வகையான சட்டங்கள் (ம) விதிகள்

- 1951 - 1-வது சட்டத்திருத்ததின்படி 9 -வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- நிலசீர்திருத்தம், ஜமீன்தாரி முறை உள்ளிட்ட பல்வேறு வகையான சட்டங்கள் (ம) விதிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- ஆரம்பத்தில் (1951) 9-வது அட்டவணையில் 13 சட்டங்கள் இருந்தது.
- தற்போது 282 சட்டங்கள் உள்ளன.
- தமிழ்நாட்டில் 69% இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் தமிழ்நாடு இட ஒதுக்கீடுகள் சட்டம் -1994, 9வது அட்டவணையில் இடம்பெற்றுள்ளது.
- 1994-76-வது சட்டதிருத்தத்தின்படி 1995-ல் 9வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது.
- விதிகள் = Art 31(B)

## 10-வது அட்டவணை - கட்சி தாவல் தடை சட்டம் Art = 102(2), 191(2)

- 1985-52-வது சட்டதிருத்தத்தின்படி 10-வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- நாடாளுமன்றம் (ம) சட்டமன்ற உறுப்பினர்களின் கட்சிதாவலை தடை செய்கிறது.
- 2003-91-வது சட்டதிருத்தத்தின்படி 10-வது அட்டவணை திருத்தப்பட்டது.
- கட்சி தாவல் தடை சட்டத்தை முதலில் கொண்டு வந்த மாநிலம்
  = மேற்கு வங்கம் - 1978

## 11-வது அட்டவணை - பஞ்சாயத்து அமைப்புகள் (அ) கிராமபாலிகா சட்டம் : விதிகள் ART 243(G)

- 1992 - 73 வது சட்டதிருத்தத்தின்படி 11-வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- 24-4-1993 -ல் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- பஞ்சாயத்துராஜ் அமைப்புகளின் (கிராம, ஊராட்சிஒன்றியம், மாவட்ட ஊராட்சி) அதிகாரங்கள், பொறுப்புகள், கடமைகள் பற்றி 29 தலைப்புகளில் குறிப்பிடுகிறது.
- பஞ்சாயத்துகள் தினம் = APRIL 24

## 12-வது அட்டவணை - நகராட்சி அமைப்புகள் (அ) நகர்பாலிகா சட்டம் : விதிகள் ART 243 (W)

- 1992- 74-வது சட்டதிருத்தத்தின்படி 12-வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- நகராட்சி அமைப்புகள் தொடர்பான (பேரூராட்சி, ந்கராட்சி, மாநகராட்சி) 18 வகையான அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள் பற்றி குறிப்பிடுகிறது.
- இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் = 1-6-1993
- ராணுவ குடியிருப்பு வாரிய சட்டம் = 1924